Show-cause Notices to Trustees.

* 257 Q.—THIRU K.S. GANAPATHI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the number of notices issued by the Deputy Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department at Tiruchirappalli, to the Trustees of various Devasthanams in the Revenue District of Tiruchirappalli directing them to show cause why they should not be surcharged for their acts during their tenure ; and

(b) the number of cases where actual proceedings have been instituted pursuant thereto ?

அறங்காவலர்களுக்கு விளக்கம் கோரி அறிவிப்புகள்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்திலுள்ள பல்வேறு தேவஸ்தானங்களைச் சேர்ந்த அறங்காவலர்கள் தம் பதவிக் காலங்களின் போது மேற்கொண்ட செயல்களுக்காக அவர்களுக்கு ஏன் தண்டக்கட்டணம் (Surcharge) விதிக்கக்கூடாது என்று காரணம் காட்டுமாறு விளக்கம் கோரி எத்தனை அறிவிப்புகள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள இந்து சமய-அறக்கட்டளை (நிர்வாக) துணை ஆணையாளரால் அனுப்பப்பட்டுள்ளன ?

(இ) அந்த அறிவிப்புகளையடுத்து, எத்தனை நேர்வுகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன ?

மாண்புமிகு திரு. கண்ணப்பன் : (அ) and (இ) ஒன்று.

திரு. கே. எஸ். கணபதி : இந்த தண்டக்கட்டண நோட்டீசானது, சர்சார்ஜ் நோட்டீசானது, இந்தத்துறை கோயில் நிர்வாகிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் ஆலயத்தில் இருக்கின்ற அறங்காவலருக்கு இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், அந்த ஆலயத்தில் பிரசாதங்கள் விற்பனை செய்வதை அந்தக் கோயிலேநேரடியாக கவனித்து வந்தது. ஆனால் 1383-வது பசலி ஆண்டில் கோயிலே நேரடியாகக் கவனிக்கலாமென்று அறங்காவலர் தீர்மானம் போட்டு சந்தானகோபால் என்பவர் சுமார் 20,442 ரூபாய்க்கு உரிமை கோரி ஒப்பந்தம் கொடுத்திருந்தார். ஆனால் அந்த ஒப்பந்தப் புள்ளியை நிராகரித்து கோயிலே நடத்தியது. கோயில் நடத்தியதில் சுமார்

1975 ஏப்ரல் 19]

35,620 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆகவே தான் கோயிலுக்கு நஷ்டம் 35,620 ரூபாயும், உரிமை கேட்கப்பட்டுள்ளபடி 20,442 ரூபாயும், ஆக இந்த இரண்டையும் சேர்த்து மொத்தமாக கோயிலுக்கு 56,062 ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடித்து, அதைத் திரும்பப் பெறுவதற்கு தற்போது நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எஸ். கணபதி : இந்தப் பண்டங்களை விற்பனை செய்வதற்கு ஏலம் கோரும்போது சரியான ஏலக்காரர் வரவில்லை என்றும், இந்த நிர்வாகமே எடுத்து நடத்தினால் லாபம் வருமென்றும் அந்த அலுவலகமே தீர்மானித்ததன் காரணமாக, இந்த நிர்வாகிகள் அதை ஏற்றுக் கொண்டதாகவும், மேலும் இந்த நஷ்டத்தைக் கணக்கிடும்போது, இந்த ஏலக்காரருக்கு கோயிலிலிருந்து கொடுக்கக்கூடிய சில இலவசப் பண்டங்களை தொகை கொடுக்க வேண்டியதாகக் கணக்கிட்டுக் கொண்டு, இது நஷ்டமாக இருக்கிறது என்று சொல்வது உண்மையா, அது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : என்னென்ன பண்டங்கள் கொடுக்கப்படுகின்றன என்கின்ற விவரம் என்னிடம் இல்லை. ஆனால் 1380-வது பசலியில் குத்தகைத் தொகை 50,355 ரூபாய்க்குப் போயிருக்கிறது. 1381வது பசலியில் குத்தகைத் தொகை 59 ஆயிரம் ரூபாய்க்குப் போயிருக்கிறது. 1382-வது ஆண்டில் 55,302 ரூபாய்க்குப் போயிருக்கிறது. 1383-வது ஆண்டிலே தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சந்தானகோபால் என்பவர் 20,442 ரூபாய்க்கு ஏலம் கேட்டு, குறைவான தொகை என்று ஆலயமே நடத்தியது. அதனால் இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் அறங்காவலர் குழு மேலும் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் என்ற காரணத்தினால் தான், திருச்சி மாவட்டத்திலுள்ள இந்து சமய-அறக்கட்டளை (நிர்வாக) துணை ஆணையாளர் விளக்கம் கேட்டுள்ளார், அறங்காவலரிடத்திலும் அதிகாரிகளிடத்திலும்.

திரு. கே. எஸ். கணபதி : நான் அதைத் தான் குறிப்பிட்டேன். இந்த ஆண்டு ஏலம் விடப்படவில்லை. அதற்கு முந்தைய ஆண்டுகளில் எல்லாம் ஏலம் விடப்பட்டிருக்கிறது. அந்த ஏலக்காரர்களுக்கு கோயிலே இனமாக கிட்டத்தட்ட 50 ஆயிரம் ரூபாய்க்கு சாமான்கள் கொடுக்கின்றது. அதற்குப்பிறகுதான் இந்தத் தொகை கொடுக்கப்படுகிறது. கிட்டத்தட்ட அவர் பெறும் தொகையும், அவர் ஏலம் கொடுக்கும் தொகையும் ஒன்றாக இருக்கும். அப்படி இருந்தும் இப்பொழுது நஷ்டத்தைக் கணக்கிடும்பொழுது, இலவசமாக வழங்கவேண்டிய பொருள்களுக்கும் கிரயம் கணக்கிட்டுத்தான், இந்த நஷ்டம் காணப்பட்டிருக்கிறது. 56 ஆயிரம் ரூபாய்க்கு நஷ்டம் காணப்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : உறுப்பினர் அவர்கள் சொல்லிறபடி, கணக்குப்பார்ப்போமானால், அது நஷ்டம் என்ற பேச்சுக்கே இடமில்லை. லாபமாகத்தான் கணக்குக் காட்டமுடியும். இந்த நடவடிக்கை தேவையில்லை என்று உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்களா ?

திரு. கே. எஸ். கணபதி : உண்மையாக நடவடிக்கை தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஏனென்றால் நியாயமாக ஒவ்வொரு ஆண்டும் கணக்கிடும் முறையிலே தொடர்ந்து கணக்கிட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. இந்தக் குழுவில் இருப்பவர்கள் யாரையும் எனக்குத்தெரியாது. இதனுடைய நிலைமைகள் எல்லாம் பத்திரிகைகளிலும் வெளி வந்தன. அதன் பிறகு நான் விசாரித்ததிலே, கிட்டத்தட்ட 50 ஆயிரம் ரூபாய்க்கான பொருள்கள் அந்த ஏலக்காரர்களுக்கு இலவசமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. விளக்கம் தரவேண்டியவர்கள் விளக்கம் தருவார்கள். அதற்கிடையிலே நாம் விளக்கம் தந்து விவரத்தைக் கெடுத்துவிடாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவை துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

(பிற்பகல் 4-30)

2. அறிவிப்புகள்.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 3/1975) மற்றும் தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சடடமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள். தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மின்சாரத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1975) மற்றும் தமிழ்நாடு, 1975ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1975) பேரவையால் நிறைவேற்றப்பட்டு இவை அரசியல் அமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவுகள் என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன.